இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 08-09-2025

# நிராகரிக்கப்பட்ட பழனிசாமி

**“நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி”** – என்பது கடுவெளிச்சித்தர் பாடல். இந்தப் பாடலுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

தன்னிடம் முதலமைச்சர் என்ற அதிகாரம் கிடைத்த போது தமிழ்நாட்டையே நாசப்படுத்தியவர்தான் இந்த பழனிசாமி. இப்போது தனது கட்சியை நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்.

தகுதியில்லாத ஒருவருக்கு அந்த நாற்காலி தரப்பட்டால், அந்த நாற்காலி நாசமாகும் என்பதற்கு அடையாளம்தான் பழனிசாமியால் நாடு பார்க்கும் பலன் ஆகும்.

ஜெயலலிதா, இறந்து போனார். சசிகலா, சிறைக்குப் போனார். இந்த நிலையில் கடந்த காலத்தில் ஒழுங்காக கப்பம் கட்டியவர் என்பதால் சசிகலா குடும்பத்தினரால், நாற்காலியில் தற்காலிகமாக உட்கார வைக்க டம்மியாகக் கொண்டு வரப்பட்டவர்தான் பழனிசாமி. தனது பெயர் அறிவிக்கப்பட்டதும், சசிகலாவின் காலை நோக்கி ஊர்ந்து போய் வணங்கினார் பழனிசாமி. ‘உங்களது கால் தூசுக்கு சமம்’ என்பதைப் போல நடித்தார் பழனிசாமி. ‘சரியான கொத்தடிமைதான்’ என்பதை அங்கீகரிக்கும் வகையில் தோள் தட்டி ஆசீர்வதித்தார் சசிகலா. அவர் தட்டிக் கொடுக்கும் போது கண்மூடி, கைகூப்பி நின்றார் பழனிசாமி. இதனை அ.தி.மு.க. உறுப்பினர்கள் மட்டுமல்ல, ஊர் பார்த்தது. உலகம் பார்த்தது. சமூக வலைத்தளங்களில் இன்னும் சிரிப்பாய் சிரித்துக் கொண்டிருக்கும் காட்சிதான் இவை.

**சசிகலா சிறைக்குள் போனதும், நாற்காலியை மொத்தமாக ஆக்கிரமித்துக் கொண்டார் பழனிசாமி. ‘டம்மி அல்ல நான், நானே மம்மி’ என்று காட்டிக் கொண்டார். தன்னை ஜெயலலிதாவாக நினைத்துக் கொண்டார். கூட்டி வந்த கூட்டத்தில் கையாட்டும் போது, தன்னை எம்.ஜி.ஆர்.ஆகக் கூட நினைத்துக் கொண்டார். தனது பதவி நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க. தலைமையின் அனைத்துக் கட்டளைக்கும் தலையாட்டினார். தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும் பா.ஜ.க. தலைமையிடம் அடகு வைத்து கையது கொண்டு மெய்யது பொத்தி நான்காண்டு காலத்தில் தமிழ்நாட்டை அனைத்துத் துறையிலும் நாசப்படுத்தினார்.**

‘நீ யார்? எனக்கு பதவி வாங்கிக் கொடுத்தாயா? நீ ஏன் சொந்தம் கொண்டாடுகிறாய்?’ என்று சசிகலாவைப் பார்த்து ஒருமையில் கேட்டதுதான் பழனிசாமியின் ‘ஒரிஜினல்’ கேரக்டர். ‘தான்’ என்ற ஆணவத்தின் வடிவம் அவர். ஆம்புலன்ஸ் டிரைவரையே மிரட்டியது அவரது அராஜகக் குணத்தின் வெளிப்பாடு ஆகும். ‘அந்த ஆம்புலன்ஸிலேயே உன்னை அனுப்பி விடுவோம்’ என்பது எல்லாம் கட்டப்பஞ்சாயத்து பேச்சு ஆகும். பழனிசாமிக்குள் என்ன இருக்கிறது என்பதை அடையாளம் காட்டும் காட்சிகள் இவை. மாண்புமிகு முதலமைச்சரையே ‘ஒருமை’யில் பேசி வருகிறார். அதனை உணர்த்திய பிறகும் அப்படித்தான் பேசுகிறார். செல்லூர் ராஜூவை அவமானப்படுத்தியதும், தம்பிதுரையை அவமானப்படுத்தியதையும் ஊடகங்கள் முன்னால் நடந்த காட்சிகள் ஆகும்.

பச்சோந்தித் தனமான, தற்குறித் தலைமைதான் பழனிசாமி என்பதை முதலில் உணர்ந்தார்கள் தமிழ்நாட்டு மக்கள். அவர் அ.தி.மு.க.வுக்கு பொறுப்பேற்றது முதல் அனைத்துத் தேர்தலிலும் தோல்வியை மட்டும்தான் பரிசாகத் தந்து வருகிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

2019 நாடாளுமன்றத் தேர்தல், 2019 சட்டமன்ற இடைத்தேர்தல், 2019 ஆம் ஆண்டில் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல்,

2021 ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், 2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2023 ஈரோடு இடைத் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், 2024 விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தல் ஆகிய அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர்தான் பழனிசாமி. இவரை மிகச் சரியாக முதலில் அடையாளம் கண்டவர்கள் தமிழ்நாட்டு மக்கள்தான்.

அடுத்ததாக சொந்தக் கட்சி முன்னணியினரால் நிராகரிக்கப்பட்டார் பழனிசாமி. சசிகலா, டி.டி.வி.தினகரன், ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் பழனிசாமியின் தலைமையை நிராகரித்து விட்டார்கள். இவர்களை உள்ளே விட்டால், மீண்டும் தான் தரையில்தான் உருள வேண்டி இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட பழனிசாமி, இவர்களை உள்ளே விடாமல் தடுத்து விட்டார்.

இவர்களைத் தடுத்தது மட்டுமல்ல, உள்ளே இருக்கும் அனைவரையும் மதிக்கவில்லை என்பதைத்தான் செங்கோட்டையனின் பேட்டி எடுத்துக் காட்டுகிறது. ‘நாங்கள் ஆறுபேர் சென்று கோரிக்கை வைத்தோம். அதைக் கேட்கும் மனநிலையில் பழனிசாமி இல்லை’ என்று செங்கோட்டையன் சொல்லி இருக்கிறார். **‘நான் வைத்தது தான் சட்டம், இருப்பவர்கள் இருங்கள்’ என்ற தன்மையோடு பழனிசாமி நடந்து கொள்கிறார். பதவி பறிக்கப்பட்ட செங்கோட்டையன், ‘எனக்கு மிகுந்த மகிழ்ச்சி’ என்கிறார். ‘எங்களையும் நீக்குங்கள்’ என்று சொந்தக் கட்சிக்காரர்களே சொல்வது, பழனிசாமி முகத்தில் விழுந்த அடியே ஆகும்.**

பழனிசாமியின் தமிழ்நாடு பயணமும் தோல்வியாகத் தான் முடிந்தது. கூட்டி வந்த கூட்டம், அவரது பேச்சுக்கு முக்கியத்துவம் தரவில்லை. அவர் பேசத் தொடங்கியதும் கலைகிறது கூட்டம். நிற்பவர்கள் மத்தியிலும், அவரது உரைக்கு வரவேற்பு இல்லை. மக்கள் நிற்க வைக்க இடம் தவிர, மற்ற இடத்தில் அவருக்கு எந்த வரவேற்பும் இல்லை. பல ஊர்களில் அவருக்கு எதிராக கருப்புக் கொடி காட்டினார்கள். பொதுமக்களும் கருப்புக் கொடி காட்டினார்கள். அ.தி.மு.க. வினரும் கருப்புக் கொடி காட்டி வருகிறார்கள்.

**தமிழ்நாட்டு மக்களால், அ.தி.மு.க. முன்னணியினரால், அ.தி.மு.க. தொண்டர்களால்.. இப்படி ஒட்டுமொத்தமாக அனைவராலும் நிராகரிக்கப்பட்டவர்தான் பழனிசாமி. அவரது ஆணவம் அனைவராலும் நொறுக்கப்பட்டு வருவதைத்தான் இப்போது நாம் பார்க்கிறோம்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 6.9.2025 அன்று இலண்டன் மாநகரில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

# அனைவருக்கும் கல்வி: திராவிட மாடல் அரசின் சாதனை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!




லண்டன், செப். 8-

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயஸ்ரீ என்ற மாணவி அரசு பள்ளியில் தமிழ்நாடு அரசின் உதவித் தொகையால் படித்து தற்போது தைவானில் உயர்கல்வி படித்து வருகிறார் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவுகள் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

2024-25ம் கல்வியாண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 901 அரசுப் பள்ளி மாணவர்கள், இந்தியா மற்றும் வெளி நாடுகளில் உள்ள முதன்மை கல்வி நிறுவனங்களில் பயின்று வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயஸ்ரீ என்ற மாணவி அரசு மாதிரிப் பள்ளியில் படித்து தமிழ்நாடு அரசின் கல்வி உதவித்தொகையால் தைவானில் உயர்கல்வி படித்து வருகிறார். ஜெயஸ்ரீயின் நம்பிக் கையூட்டும் வீடியோவை தனது சமூக வலைதளப் பக்கத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பகிர்ந்துள்ளார்.


துணை முதல்வரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தமது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# மரக்காணத்தில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

மரக்காணம் செப் 8–

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் மரக்காணம் பேரூராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் பொறுப்பு டாக்டர் லதா தலைமை தாங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் முன்னிலை வகித்தார். பேரூராட்சி மன்றத் தலைவர் வேதநாயகி ஆள வந்தார் அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து முகாமில் அமைக்கப்பட்டபல்வேறு கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

முகாமில் விழுப்புரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், விழுப்புரம் மாவட்ட சுகாதார அலுவலர் செந்தில் குமார், மெடிக்கல் மருத்துவ கண்காணிப்பாளர் பார்த்தசாரதி, வட்டார மருத்துவ அலுவலர் கார்த்திகேயன், துணைச் சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பலராமன், செயல் அலுவலர் ஜேம்ஸ் டி.சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவல்லி குப்புராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள்துர்கா கலைஞர், பெருமாள், சபரி முனுசாமி, ராஜதுரை, பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் தேசப்பன், கணபதி, வேலு, பிரபாகரன், நல்வழி, முத்துவேல், சத்தியவாணி கோபாலகண்ணன், அமானுல்லா, யாசின், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் தங்கராஜ், ஒன்றிய துணை செயலாளர் தயாளன், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றிவேல், மாவட்டப் பிரதிநிதி பாபு உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல், மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம், பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இ.சி.ஜி. உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியாகிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள் முகாமில் வழங்கப்பட்டது .

இந்த முகாமில் 2000 க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

மருத்துவ முகாமில் பயனடைந்தவர்கள் அனைத்து நோய்களுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணப்படுவதால் வயதானவர்கள் எந்த ஒரு சிரமமும் இன்றி தங்களது உடல்நிலை ஒரே இடத்தில் பரிசோதனை செய்து அந்தந்த சிகிச்சைக்கு தேவையான மருந்து மாத்திரைகள் மருத்துவர்கள் கொடுத்து அனுப்புகின்றனர் இது போன்ற ஒரு உன்னதமான திட்டத்தை அறிவித்து செயல்படுத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

முன்னதாக நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாமில் மரக்காணம் பேரூராட்சி மன்ற கவுன்சிலர் பிரபாகரன்உள்ளிட்ட 40க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் வழங்கினர்.

குறளிசைக் காவியம் படைத்துள்ள

# இசைக் கலைஞர் லிடியன் நாதஸ்வரம் - அமிர்தவர்ஷினிக்கு பாராட்டு - வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 8–

திருக்குறளைக் குழந்தைகள் முதல் அனைத்து வயதினரும் உள்வாங்கிடும் வகையில் குறளிசைக் காவியம் படைத்துள்ள இசைக் கலைஞர் லிடியன் நாதஸ்வரம் மற்றும் அமிர்தவர்ஷினி ஆகியோரை பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

பதின்பருவம் கடக்கின்ற இளம் வயதிலேயே, உலகப் பொதுமறையான திருக்குறளைக் குழந்தைகள் முதல் அனைத்து வயதினரும் உள்வாங்கிடும் வகையில் குறளிசைக்காவியம் படைத்துள்ள உடன்பிறப்புகள் லிடியன் நாதஸ்வரம் மற்றும் அமிர்தவர்ஷினி ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகிறேன்!

இசையில் தோய்ந்து பல திறமைமிக்க குரல்களில் ஒலித்திடும் குறளமுதத்தினை அனைவரும் கேட்டிட வேண்டும்! குறளிசைக்காவியம் எல்லோர் உள்ளங்களில் நிலைபெற்றிட வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.


நெல்லை கிழக்கு மாவட்ட விவசாய அணி தலைவர் நடராஜன் இல்லத் திருமண விழா கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் – கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி பங்கேற்று மணமக்கள் மனோஜ் – இராஜ பிரியா ஆகியோரை வாழ்த்தினார். நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன்,தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மாவட்ட விவசாய அணி தலைவர் நடராஜன்,தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வ சூடாமணி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.